Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 224 | வெள்ளிக்கிழமை 08 ஜூலை 2022 | ஆனி 24 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 12 | விலை : ரூ. 50



"இப்பிடி எல்லாமே ஒவ்வொண்டா முடங்கிக் கொண்டு போனால் இலங்கைக்கு கொஞ்ச நாளில அடக்கம் தான் பாருங்கோ..."

## வெதுப்பக உற்பத்திகள் தடைப்படும் அபாயம்!

### வெதுப்பக உற்பத்தியாளர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 8
பாண் உட்பட வெதுப்பக உற்பத்திகளைத் தொடர்ந்தும் உற்பத்தி செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.
யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு 11

## டீசல் தீரும் வரையில் உற்பத்தி தொடரும்!

### பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 8
எம்மிடம் டீசல் கையிருப்பு உள்ளவரையில் வெதுப்பக உற்பத்திகள் மேற்கொள்ளப்படும் என்று 11

## இ.போ.ச. முடங்கும்?

கொழும்பு, ஜூலை 8
தங்களின் போக்குவரத்துக்குரிய பெற்றோல் வழங்கப்படாவிட்டால் இன்று நண்பகல் 12 மணி முதல் கடமைகளில் இருந்து விலகிக் கொள்வோம் என்று இலங்கை போக்குவரத்துச் 11

## போராட்டங்களை முடக்க அரசாங்கம் தீவிர முயற்சி

### அவசரகாலச் சட்டத்தை கையிலெடுக்க ஆலோசனை

கொழும்பு, ஜூலை 8
**நாளை அரசாங்கத்துக்கு எதிராகப் பெரும் போராட்டம் நடத்த ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், நாடு முழுவதும் அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.** 11

## சைக்கிள் திருட்டு ஒருவர் கைது

யாழ்., ஜூலை 8
யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் சைக்கிள்கள் திரு டிய குற்றச்சாட்டில் நேற்று யாழ்ப்பாணம் பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
கைது செய்யப்பட்டவரிடமிருந்து 6 சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும், சைக்கிள்களைப் பறிகொடுத்தவர்கள் 11

## டெங்குத் தொற்றால் இளைஞர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 8
டெங்குத் தொற்றுக்குள்ளான இளைஞர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை நடந்துள்ளது. 11

## போராட்டங்களுக்கு தடை விதிக்க மறுப்பு

கொழும்பு, ஜூலை 8
எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவோர் ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பகுதிக்குள் பிரவேசிக்கத் தடை விதிக்க வேண்டுமென்று கோரி பொலிஸார் முன்வைத்த கோரிக்கையை கொழும்பு மேலதிக நீதிவான் கேமிந்த பெரேரா நிராகரித்துள்ளார். 11

## வாகன இலக்கத்தைப் பதிந்து பெற்றோல் வழங்க ஏற்பாடு!



யாழ்ப்பாணம், ஜூலை 8
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு அருகிலுள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வாகனங்களின் இலக்கங்களைப் பதிவு செய்து எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 11



## எரிபொருள் வழங்கக்கோரி வீதியை மறித்து போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 8
எரிபொருள் வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து காரைநகர் - வலந்தலைச் சந்தியில் போக்குவரத்தை முடக்கி நேற்று மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
எரிபொருள் பெறுவதற்காக கடந்த 5 நாள்களாகக் காத்திருக்கின்றோம் என்று தெரிவித்த மக்கள் தங்களுக்கு எரிபொருள் வழங்கப்பட 11

## அரசாங்கத்துக்கு எதிராக யாழில் சைக்கிள் பேரணி

யாழ்ப்பாணம், ஜூலை 8
ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கத்தைப் பதவி விலகக் கோரி நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் இருந்து சைக்கிள் 11

## திடீரென கழன்று வீழ்ந்த இ.பே.ச. பஸ் மிதிபலகை

### ஒருவருக்குக் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 8
அதிக பயணிகளுடன் பயணித்த இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்ஸின் மிதிபலகை திடீரென வீதியில் கழன்று வீழந்துள்ளது. அதில் ஒருவர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். 11



## பணவீக்கம் விரைவில் 70 வீதமாக உயரும்

### மத்திய வங்கி ஆளுநர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 8
இலங்கையின் பணவீக்கம் அடுத்த சில மாதங்களில் 70 வீதமாக அதிகரிக்கலாம் என்று மத்திய வங்கி ஆளுநர் 11

## சுகாதாரத்துறைக்கு இன்று பெற்றோல் வழங்கப்படாது

கொழும்பு, ஜூலை 8
இன்று சுகாதாரத் துறையினருக்குப் பெற்றோல் விநியோகிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், இன்று பெற்றோல் வழங்கப்படாது என்று சுகாதார அமைச்சின் செயலாளர் நேற்று அறிவித்துள்ளார். 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பொருளாதாரப் பாதிப்பின் தாக்கங்களை*

# வடக்கில் நேரில் ஆய்வு செய்யும் உலக உணவுத் திட்டப் பிரதிநிதிகள்

**யாழ்ப்பாணம், ஜூலை 8**

**பொருளாதாரப் பாதிப்பால் வடக்கு மாகாணத்தில் எவ்வாறான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன என்பது தொடர்பில் ஐ.நா.வின் உலக உணவுத் திட்டப் பிரதிநிதிகளால் நேரடியாகக் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு அமைவாகவே உலக உணவுத் திட்டத்தின் எதிர்கால உதவிகள் வடக்கு மாகாணத்துக்கு கிடைக்கப்பெறவுள்ளன.**



பொருளாதாரப் பாதிப்பு, போசாக்கில் எவ்வாறான தாக்கங்களைச் செலுத்தியுள்ளது என்பது தொடர்பில் உலக உணவுத் திட்டப் பிரதிநிதிகள் விசேட கவனமெடுத்து ஆராய்ந்தனர். குறிப்பாக பாடசாலை சிறுவர்கள், பாலூட்டும் தாய்மார், கர்ப்பிணித்தாய்மாரின் போசாக்குகளில் எவ்வாறான பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்று சுகாதார அதிகாரிகளிடம் கேட்டறிந்து கொண்டனர்.

விலை அதிகரிப்புக் காரணமாக சத்துள்ள - போசாக்கான உணவுகளை கொள்வனவு செய்வதை தவிர்த்தல் போன்ற விடயங்களையும் ஆராய்ந்துள்ளனர். பாடசாலை மாணவர்களுக்கு உலக உணவுத் திட்ட நிதி ஒதுக்கீடு, தற்போதைய விலை அதிகரிப்பில் போதுமானதாக இல்லை என்பதும் உலக உணவுத் திட்டத்தின் பிரதிநிதிகளுக்கு எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

உலக உணவுத் திட்டப் பிரதிநிதிகள் வடக்கின் 5 மாவட்டங்களினதும் மாவட்ட நிர்வாகங்களுடன் கலந்துரையாடலை நடத்தி வருவதுடன், பிரதேச மட்டங்களிலும் ஆராய்ந்து வருகின்றனர். அத்துடன் நேரடியாக கள ஆய்விலும் ஈடுபட்டுள்ளனர்.

இந்த ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் சமர்ப்பிக்கும் அறிக்கைக்கு அமைவாகவே, எதிர்காலத்தில் உலக உணவுத் திட்டத்தின் வடக்குக்கான உதவிகள் அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-5,14,13,19)

## பொருளாதார மரணச்சூழலில் சிக்கியிருக்கின்றது இலங்கை!

*வொஷிங்டன் போஸ்ட் சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஜூலை 8

இலங்கை பல மாதங்களாக பொருளாதார மரணச் சூழலில் சிக்கியுள்ளது என்று செய்தி வெளியிட்டுள்ளது சர்வதேச ஊடகமான வொஷிங்டன் போஸ்ட். இது தொடர்பில் வொஷிங்டன் போஸ்ட் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

கடன் நெருக்கடி, தொற்றுநோய்களின் அதிகரிப்பு மற்றும் உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு என்பன காரணமாக இலங்கையின் நிலை தீவிரமடைந்துள்ளது. உணவு, எரிபொருள், சமையல் எரிவாயு, மருந்துகள் ஆகியவற்றில் இலங்கையில் தீவிரமான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. உணவு விலை, பணவீக்கம் சுமார் 57 சதவீதமாக உள்ளது.

பெருகிவரும் பொதுமக்களின் கோபம் மற்றும் எதிர்ப்புக்கள் மே மாதம் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் அரசாங்கத்தை வீழ்த்தியது, எனினும் நெருக்கடி நிலைமைகள் நீடித்தன. அத்துடன் பாதுகாப்புப் படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் புதிய மோதல்களின் சாத்தியக்கூறுகள் பற்றிய அச்சங்கள் அதிகரித்துவருகின்றன.

இலங்கையில் பாடசாலைகள் மற்றும் அலுவலகங்கள் கிட்டத்தட்ட வாரம் முழுவதும் மூடப்பட்டுள்ளன. கடந்த வாரம், தலைநகர் கொழும்பில் மருத்துவர்கள், மருத்துவ ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் வங்கியாளர்கள் அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான பெற்றோல் அல்லது டீசலைப் பெற்றுக்கொள்ள இயலாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுதந்திர நாடான பின்னர் வரலாற்றில் முதல் தடவையாக இலங்கை மே மாதம் கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை. இறக்குமதிக்கு பணம் செலுத்த முடியாத பாதை இருண்டதாகவே உள்ளது. கடவுச்சீட்டு அலுவலகங்களில் வரிசைகள் இப்போது நீளமாக உள்ளன.

பல பொதுமக்கள் இந்தியா போன்ற அருகிலுள்ள நாடுகளுக்கு படகு வழியாக தப்பிச் செல்ல முயற்சிக்கின்றனர். இலங்கைப் பொருளாதாரத்தின் அழிவை ஆய்வாளர்கள், 1990 களின் பிற்பகுதியில் தென்கிழக்கு ஆசியாவின் முக்கியமான பொருளாதாரங்களில் ஏற்பட்ட நிதிக் குழப்பத்துடன் ஒப்பிட்டுள்ளனர். 'தெற்காசியாவின் லெபனானாக', கடனில் சிக்கி, செயலிழந்த நாடாக, இலங்கை மாறும் என்றும் ஏனையவர்கள் எச்சரிக்கின்றனர் - என்றுள்ளது. (ம)

# நாளைய போராட்டத்தில் தாக்குதலுக்குத் திட்டம்!

ஜே.வி.பி. மீது பழிபோடவும் சதி என அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 8

ஜூலை 9ஆம் திகதி (நாளை) கொழும்பில் அரசாங்கத்துக்கு எதிராக மிகப்பெரும் போராட்டம் நடைபெறவுள்ள நிலையில், இந்தப் போராட்டத்தில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்துவதற்கு சதி செய்யப்பட்டுள்ளது என்றும், அந்தத் தாக்குதல் ஜே.வி.பி.யால்தான் நடத்தப்பட்டது என்று பழிபோடுவதற்கு முயற்சிக்கப்படுகின்றது என்றும் ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நாளையதினம் அரசாங்கத்துக்கு எதிராக மிகப்பெரும் போராட்டத்தை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் போராட்டத்தில் தாக்குதல் நடத்தத் திட்டமிடப்படுவது போன்ற காணொலியொன்று சமூக வலைதளங்களில் பரப்பப்பட்டு வருகின்றது. அந்தக் காணொலியில் பெற்றோல் குண்டு தயாரிக்கும் முறை குறித்து, ஜே.வி.பியின் உறுப்பினர் ஒருவர், கட்சியின் உறுப்பினர் ஒருவருக்கு ஆலோசனை வழங்கும் வகையில் உரையாடுகின்றார். 'பெற்றோல் குண்டை வயிற்றில் கட்டிக்கொண்டு வந்து ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டு ஜனாதிபதியை விரட்டியடி' என்று அவர் தெரிவிக்கின்றார்.

எனினும், இந்தக் காணொலி முற்றுமுழுதாகப் போலியானது என்று மறுத்துள்ளார் அநுரகுமார திஸாநாயக்க. 'இந்தக் காணொலி தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறையிடவுள்ளேன். அரசாங்கத்துக்கு எதிரான மக்களின் பேரெழுச்சியில் படுகொலை செய்யும் சூழ்ச்சிகள் இந்தக் காணொலியில் இடம்பெற்றுள்ளன என்பது இதிலிருந்து புலப்படுகின்றது. குற்றப்புலனாய்வுத் திணைக்களம் இது குறித்து முறையான விசாரணை நடத்தி, இந்தக் காணொலியை உருவாக்கியவர் யார்? அந்தக் குரல் யாருடையது? அதனை சமூக வலைத்தளங்களுக்கு வெளியிட்டவர் யார்? என்பதை வெளிப்படுத்த வேண்டும். விசாரணைகள் மூலம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் இதைக் கண்டறிய முடியாவிட்டால், இதனை அரசாங்கமே செய்தது என்ற நியாயமான, துல்லியமான சந்தேகம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது - என்று அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (ம)

*எரிபொருள் தட்டுப்பாடு*

## குடிதண்ணீர் விநியோகம் இல்லை: பொதுமக்கள் கவனவீர்ப்பு!

கிளிநொச்சி, ஜூலை 8

எரிபொருள் தட்டுப்பாட்டால் பூநகரி -ஞானிமடம், செட்டியாகுறிச்சி, செம்மண்குளம், சித்தங்குறிச்சி ஆகிய கிராமத்தில் குடிதண்ணீர் விநியோகம் இடம்பெறுவதில்லை எனத் தெரிவித்து அந்தப்பகுதி மக்கள் ஞானிமடம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை முன்பாக கவனவீர்ப்புப் போராட்டமொன்றை நேற்று முன்னெடுத்தனர்.



குறித்த பகுதிகளில் குடிதண்ணீர் தட்டுப்பாடு நீண்டகாலமாக நிலவி வருகின்றது. அந்தப்பகுதி மக்கள் பூநகரி பிரதேசசபையின் பவுஸர் மூலம் பணத்தைக்கொடுத்து குடிதண்ணீரைப்பெற்று வந்தனர். தற்போதைய எரிபொருள் தட்டுப்பாட்டால் பிரதேசசபையும், ஏனைய தனியாரும் குடிதண்ணீர் விநியோகத்தை நிறுத்தியுள்ளனர். இதன் காரணமாக அந்தப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த நிலையில் தமக்கான குடிதண்ணீரை விரைவில் வழங்குமாறு கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். (ஒ-14,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.200க்கும் குறைந்த விலையில் பெற்றோலை வழங்க வாய்ப்பு!

## பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 8**

**ஒரு லீற்றர் பெற்றோலை 200 ரூபாவுக்கும் குறைந்த விலையில் வழங்கமுடியும் என்று பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்னாயக்க தெரிவித்தார்.**

கோப் குழுவில் நேற்றுமுன்தினம் முன்னிலையாகிக் கருத்துரைத்த அவர் மேலும் தெரிவித்ததாவது: பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சாரசபைக்கு எரிபொருளை வழங்கும்போது பிரச்சினை ஒன்று உள்ளமை தெரியவந்தது. இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்தபோது, குறித்த அமைச்சரால் முன்வைக்கப்பட்டுள்ள சூத்திரமானது, எந்தவித அடிப்படைத் தன்மையும் இல்லாமல் உள்ளதோடு அதற்கமைய விலைத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. இதற்கமைய, கடந்த இரண்டு மாதங்களில் இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருளுக்கான கட்டணம் மற்றும் அதற்கான வரி என்பன தொடர்பில் நாம் ஆராய்ந்துள்ளோம். அவற்றுக்கு இடையில் 150 ரூபா முதல் 200 ரூபா வரையான வித்தியாசம் காணப்படுகின்றது - என்றார். (ம)

# திருட்டு அரசை வெளியேற்ற அனைவரும் ஒன்றிணைக!

## தமிழ் முற்போக்குக் கூட்டணி கோரிக்கை

கொழும்பு, ஜூலை 8

மக்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு எதிர்வரும் ஜூலை 9 ஆம் திகதி மூத்த சட்டத்தரணிகள் சங்கத்தால் விடுக்கப்பட்ட போராட்ட அழைப்பில் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை நெருக்கடியான இக்கட்டு நிலைக்குள் தள்ளிய திருட்டு அரசாங்கத்தை வெளியேற்றுவோம்.

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் எதிரணிக் கட்சிகள் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள அரசுக்கு எதிராக அமைதியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணி முழுமையாகப் பங்குபெறும்.

அன்றைய தினம் மலையகப் பகுதிகளில் பணிகளைப் புறக்கணித்து நாட்டை நெருக்கடியான இக்கட்டு நிலைக்குள் தள்ளிய திருட்டு அரசாங்கத்துக்கு எதிராக போராடுவதற்கு மலையக தோட்ட தொழிலாளர்கள் மற்றும் மலையக மக்களை தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் கோருகிறோம்.

அதேபோல் கொழும்பு உட்பட நகரங்களில் வர்த்தக நிலையங்களையும், அலுவலகங்களையும் மூடி, முழுமையாக அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும்படியும் தமது வேலைத்தலப் பணியாளர்களையும் அரசு எதிர்ப்பு இயக்கத்தில் கலந்துக்கொள்ளமாறும் அனைத்து தரப்பினரையும் கோருகின்றோம் - என்றார்.

இதேவேளை ஜூலை 9 ஆம் திகதி போராட்டத்துக்கு மூத்த சட்டத்தரணிகள் விடுத்த அழைப்புக்கு எதிர்க் கட்சிகள், காலிமுகத்திடல் போராளிகள் மற்றும் சிவில் சமூகத்தினர் ஆகியோர் ஏகோபித்த ஆதரவு வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# உணவுப்பொருள் தட்டுப்பாடு 50 தொன் அரிசி கொள்வனவு!

## ச.தொ.ச. நிலையங்கள் ஊடாக விநியோகம்



கொழும்பு, ஜூலை 8

நாடளாவிய ரீதியில் உள்ள 444 ச.தொ.ச. விற்பனை நிலையங்கள் ஊடாக அத்தியாவசியப் பொருள்களைத் தட்டுப்பாடின்றி பெற்றுக்கொடுக்க வணிக கூட்டத்தாபனத்தின் மூலம் 50 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி கொள்வனவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு நேற்றுமுன்தினம் நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் வர்த்தக, உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலக வங்கி, உலக உணவுத் திட்டம் மற்றும் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் அத்தியாவசிய பொருள்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்திய அரசாங்கம் 180 மில்லியன் அமெரிக்கன் டொலர் பெறுமதியான அத்தியாவசியப் பொருள்களை இலங்கைக்கு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது. இவை எதிர்வரும் இரண்டு மாதங்களில் நாட்டுக்கு கிடைக்கும்.

அதேவேளை அத்தியாவசிய உணவுப் பொருள்களை அதிகமாக சேகரித்து வைப்போர் மற்றும் பதுக்குவோர் தொடர்பில் விசேட சட்டங்கள் பாயும்.

நாட்டரிசி ஒரு கிலோ 220 ரூபாவுக்கும் சம்பா அரிசி ஒரு கிலோ 230 ரூபாவுக்கும் கீரிசம்பா ஒரு கிலோ 260 ரூபாவுக்கும் கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் ஏனைய அத்தியாவசிய பொருள்களுக்கும் கட்டுப்பாட்டு விலை விதிக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ச-இ)

# ரயில் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு முடிவுக்கு வந்தது

கொழும்பு, ஜூலை 8

ரயில்வே ஊழியர்கள் உட்பட பல தொழிற்சங்கங்களின் ஊழியர்கள் மீண்டும் நேற்றுக் காலை ஆரம்பித்த பணிப்புறக்கணிப்பு நேற்று மதியம் முடிவுக்கு வந்தது.

சேவைக்கு சமுகமளிக்க எமக்கும் எரிபொருள் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனக் கோரி கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் ரயில் கட்டுப்பாளர்கள், இயந்திரச் சாரதிகள், அதிபர்கள் உள்ளிட்ட பணிக்குழுவினர் 24 மணிநேர பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தநிலையில் அவர்களது கோரிக்கைக்கு அரசாங்கம் செவிசாய்க்காத நிலையில் மீண்டும் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

இதன்காரணமாக நாட்டில் நேற்று பல ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன. ரயில்வே தலைமையகத்தின் பிரதான நுழைவாயிலை மறித்து அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் நேற்று மதியம் அவர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டனர். இதனால் நிறுத்தப்பட்ட ரயில் சேவைகள் மீள ஆரம்பமாகின. (ச-இ)

# மக்களின் உரிமைகளை பொலிஸ் உறுதி செய்யும்

## பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 8

அமைதியான போராட்டங்களை நடத்த மக்களுக்கு உரிமை உண்டு என்றும், மக்களின் உரிமைகளைப் பொலிஸார் உறுதி செய்வார்கள் என்றும் பொலிஸ் மா அதிபர் சீ.டீ.விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கு எதிராக நாளை பெரும் போராட்டங்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையிலேயே பொலிஸ் மா அதிபர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது :-

அமைதியான போராட்டங்களை நடத்த மக்களுக்கு உரிமை உண்டு. அரச அல்லது பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதையும், பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோர் தவிர்க்கவேண்டும்- என்றார். (எ-இ)

# டொலரில் கொள்வனவு செய்தால் முன்னுரிமை

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 8

அமெரிக்க டொலரில் எரிபொருளை கொள்வனவு செய்வோருக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் விநியோகம் செய்வதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

இத்தகைய தரப்பினரிடமிருந்து விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அமெரிக்க டொலரில் எரிபொருளை பெற்றுக்கொள்வோர் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இணையத்தளத்தில் இருந்து விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள முடியுமென தெரிவித்துள்ளது. (எ-இ)

# பதுக்கி வைத்திருந்த 300 லீற்றர் டீசல் மீட்பு



யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 300 லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நகர் பகுதி ஒன்றில் டீசல் பதுக்கி வைக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் டீசல் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-26-125)

# ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்தவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 8

ஐஸ் போதைப் பொருளைக் கடத்திய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், சத்திரச் சந்திக்கு அருகில் வைத்து நேற்றுமாலை சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே சந்தேகநபர் இராணுவ புலனாய்வுப் பிரிவினரின் உதவியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (எ-26,23,20,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள – பௌத்த நாடு அமைந்தால் தமிழ்நாடு அமைவதும் நியாயம்தானே?

## காலிமுகத்திடல் போராட்டக்காரர்களுடனான கலந்துரையாடலில் மனோ எம்.பி. கேள்வி!

**கொழும்பு, ஜூலை 8**

**‘சிங்களபௌத்த நாடு என்று அமைக்கபோனீர்கள் என்றால், இந்நாட்டில் இன்னொரு மூலையில் தமிழ்நாடும் அமையும். அது நியாயம்தானே?’ இவ்வாறு காலிமுகத்திடல் போராட்டக்காரர்களிடம் நேரில் தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான மனோ கணேசன்.**

காலிமுகத்திடல் போராட்டக்காரர்களுக்கும் எதிர்க்கட்சியினருக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் உரையாற்றுகையிலேயே மனோ கணேசன் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

1948ஆம் ஆண்டில் மலையக உழைப்பாளிகளின் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டமை 74 வருட சரித்திரத்தின் முதற்கோணல். சிங்களம் மட்டும் சட்டம் இரண்டாம் கோணல். ‘புது மாற்றங்கள்’ வருகின்றன என சொல்லப்படும் இது ஒரு கனாக்காலம்.

இவ்வாறான ஒரு மாற்றம் அல்லது சந்தர்ப்பம் இனி எப்போது வருமோ தெரியாது. வந்தாலும் நான் உயிருடன் இருப்பேனோ தெரியாது. நீங்கள் அமைக்க விரும்பும் நாடும், சிங்களபௌத்த நாடாக இருக்கக் கூடாது.

அது சிங்கள, தமிழ், முஸ்லிம் நாடாக இருக்க வேண்டும். சிங்கள பௌத்த நாடு என்று அமைக்க போனீர்கள் என்றால், இந்நாட்டில் இன்னொரு மூலையில் தமிழ் நாடும் அமையும். அது நியாயம் தானே? -என்றார். (ம)

# அரச எதிர்ப்புப் போராட்டம்: ஒன்றிணைந்த எதிரணிகள்

கொழும்பு, ஜூலை 8

கொழும்பில் நாளையதினம் இடம்பெறவுள்ள போராட்டம் தொடர்பில் அரச எதிர்ப்பாளர்கள், எதிர்க்கட்சியினர் இடையே பொதுவான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

போராட்டத்தை வெற்றிகொள்ளும் இணக்கப்பாடு என்ற பெயரில் கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஒன்றிணைந்த பொது மாநாட்டின்போது இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. (ம)



# வவுனியாவில் கிராம அலுவலர் ஊடாக எரிபொருள் அட்டை வழங்க தீர்மானம்

வவுனியா மாவட்டத்தில் கிராம அலுவலர் ஊடாக எரிபொருள் அட்டை வழங்கி நெருக்கடி நிலையைக் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று வவுனியா மாவட்டச்செயலர் பீ.ஏ.சரத்சந்திர தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட மக்கள் அமைப்பின் பிரதிநிதிகளுக்கும், இராணுவ, பொலிஸ் மற்றும் பிரதேச செயலர்களுக்கிடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எரிபொருள் பெறுவதில் உள்ள நெருக்கடி தொடர்பிலும் எரிபொருள் முறையாக பங்கீடு செய்யப்படாமை தொடர்பிலும் மக்கள் அமைப்பின் பிரதிநிதிகள், மாவட்டச்செயலர் மற்றும் அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தினர். அத்துடன் எரிபொருள் விநியோக கறுப்புச் சந்தையைக் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. மேலும் அத்தியாவசிய தேவையற்ற எரிபொருள் விநியோகத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது. அவர்களின் கோரிக்கைக்கு அமைவாக பிரதேச செயலகம் மற்றும் கிராம அலுவலர்கள் ஊடாக எரிபொருள் அட்டையை முதற்கட்டமாக குடும்பத்துக்கு ஒன்று என்ற அடிப்படையில் விநியோகித்து, அவர்களுக்குத் தேவையான எரிபொருளை கிராம அலுவலர்கள் ஊடாக வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஓ-14-18)

## தனியார் பேருந்துச் சங்கத்துக்கு

# எரிபொருள் வழங்குமாறு கோரி மாவட்டச்செயலருக்குக் கடிதம்

கிளிநொச்சி, ஜூலை 8

கிளிநொச்சியில் தனியார் பேருந்துச் சேவையை தடையின்றி முன்னெடுக்க தமது சங்கத்துக்கு எரிபொருள் வழங்குமாறு கோரி கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரனுக்கு தனியார் பேருந்துச் சங்கத்தால் கடிதம் நேற்று கையளிக்கப்பட்டது.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான எரிபொருள் நிலையங்களில் தனியார் பேருந்துச் சங்கத்துக்கும் எரிபொருள் வழங்குமாறு அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டது. கிளிநொச்சி அரச பேருந்து சாலையினர் தனியார் பேருந்துச் சேவையினருக்கு எரிபொருளை வழங்காது இழுத்தடிப்பு செய்து வந்தனர்.

இதனால் தனியார் பேருந்துச் சங்கத்தினர் போராட்டமொன்றை கடந்த செவ்வாய்க்கிழமை முன்னெடுத்தனர்.

இது தொடர்பில் மாவட்டச்செயலருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து, அன்றைய தினமே தனியார் பேருந்துச் சங்கத்தினருக்கு ஆயிரம் லீற்றர் டீசல் வழங்குமாறு பணிக்கப்பட்டது. ஆனால் அரச பேருந்து சாலையினர் டீசல் வழங்காது இழுத்தடிப்பு செய்தனர். அதன்பின்னர் பொலிஸாரின் முன்னிலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை டீசல் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும் குறித்த அரச பேருந்து சாலையினர் தனியார் பேருந்து சங்கத்தினருக்கு டீசல் வழங்க மறுத்தனர். அதனையடுத்தே தனியார் பேருந்துச் சங்கத்தால் மாவட்டச்செயலருக்கு நேற்று கடிதம் கையளிக்கப்பட்டது.

மாவட்டச்செயலர், குறித்த பேருந்து சாலை முகாமையாளருடன் தொடர்புகொண்டு தனியார் பேருந்துச் சங்கத்துக்கு டீசல் வழங்கப்படாமைக்கான காரணத்தைக் கோரினார். அதற்குப் பதிலளித்த முகாமையாளர் தனியார் தொழிற்சங்கத்தினர் டீசல் வழங்குவதற்குத் தடைகளை ஏற்படுத்துவதாகவும் டீசல் பெற்றுக்கொள்ள நேற்றுமுன்தினம் 4 மணி வரை தனியார் பேருந்துச் சங்கத்தினர் வரவில்லை எனவும் தெரிவித்தார்.

ஆனால் அதே நாளில் தனியார் பேருந்துச் சங்கத்தினர் எரிபொருள் வழங்குமாறு கோரி சாலை பிரதான வாயிலை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அரச பேருந்து சாலையினரே தனியார் பேருந்துச் சங்கத்துக்கு எரிபொருளை வழங்க இழுத்தடிப்பு செய்தமை தெரியவந்தது. (ஓ-14-113)

# தனியார் பஸ்களுக்கு விநியோகிக்கும் டீசல் அதிக விலையில் மீள்விற்பனை

## போக்குவரத்து அமைச்சு அதிகாரிகள் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 8

தனியார் பேருந்துகளுக்காக வழங்கப்படும் டீசல் அதிக விலையில் மீள் விற்பனை செய்யப்படுகின்றது என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற கோபா குழுக்கூட்டத்தில் இதுதொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

தற்போது இலங்கைப் போக்குவரத்துச் சபையின் டிப்போக்களுக்குச் சொந்தமான எரிபொருள் நிலையங்களில் தனியார் பேருந்துகளுக்கு டீசல் விநியோகிக்கப்படுகின்றது.

இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் டீசலை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சிலர் வெளியாருக்கு அதிக விலையில் விற்பனை செய்கின்றனர் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன. பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்தி ஈட்டுகின்ற வருமானத்தைவிட டீசல் விற்பனை மூலம் பேருந்து உரிமையாளர்கள் அதிக இலாபம் அடைகின்றனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

உடனடியாக இவ்வாறான செயற்பாட்டை கட்டுப்படுத்தி மக்கள் போக்குவரத்து அசௌகரியங்களுக்கு உள்ளாவதை தடுக்க வேண்டும்.


இதற்கென எரிபொருள்களை சேகரிக்கும் விதத்தில் தனியார் பேருந்துக்கள் செயற்படுகின்றனவா? என்பதை கண்காணிக்கும் முறைமை தயாரிக்க வேண்டும் என கோபா குழு வலியுறுத்தியது.

இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளும் பேருந்துகளை கண்காணிப்பதற்கு ஜி.பீ.எஸ். தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீளும் எரிபொருள் வரிசை உயிரிழப்புகள்

## நேற்றும் இருவர் சாவு




கொழும்பு, ஜூலை 8

எரிபொருள் வரிசையில் காத்திருந்த இருவர் நேற்று உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை, பயாகல பகுதியிலுள்ள எரிபொருள் நிலையத்தில் வரிசையில் காத்திருந்த மொரட்டுவை பகுதியைச் சேர்ந்த 60 வயதான முதியவரும், பம்பலப்பிட்டி பகுதியில் வரிசையில் காத்திருந்த 60 வயதான முதியவருமே இவ்வாறு உயிரிழந்தனர்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியால் எரிபொருள், எரிவாயு போன்றவற்றுக்காக மக்கள் நாள்கணக்கில் வரிசையில் காத்திருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் எரிபொருள் வரிசையில் காத்திருந்து உயிரிழந்தோரின் எண்ணிக்கை 16 ஆக அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



## பெற்றோலைப் பெற வரிசையில் பசுமாடு

*நான் சென்றால் சீவியம் பாழாகிவிடும் உரிமையாளர் ஆதங்கம்*

கொழும்பு, ஜூலை 8

எரிபொருளைப் பெறுவதற்காக பசுமாடு ஒன்றை எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் வரிசையில் கட்டிவைத்து பண்ணை உரிமையாளர் ஒருவர் கவனயீர்ப்பு செய்துள்ளார்.

தம்புள்ளை அத்துபாராய பிரதேசத்தைச் சேர்ந்த பண்ணையாளர் ஒருவரால் இந்தச் செயல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது பசுமாட்டின் வயிற்றில் மோட்டார் சைக்கிள் இலக்கத்தை அணிவித்து வரிசையில் கட்டிவைத்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்,

வாழ்வாதாரத் தொழிலாக 50 பசு மாடுகளை வளர்த்து அன்றாடம் பால்விற்பனை செய்து வருகின்றேன்.

எனது கால்நடை வளர்ப்புக்கான எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு பல நாள்களாக வரிசையில் காத்திருந்தும் எரிபொருள் கிடைக்கவில்லை. மாடுகளைப் பராமரிக்கும் மற்றும் தினசரி மேற்கொள்ளும் பால் விற்பனைத் தொழிலை விட்டுவிட்டு வரிசையில் நின்றால் அன்றாட சீவியம் இல்லாமலாகிவிடும்.

இந்த நிலையிலேயே எனது பண்ணையிலுள்ள பசுமாடு ஒன்றை எரிபொருள் வரிசையில் கட்டிவைத்துவிட்டு எனது பணியை மேற்கொள்ள சென்றுள்ளேன் - என்றார். (ச-இ)

## சைக்கிளில் சென்ற அதிபருக்கு பெற்றோரால் எரிபொருள்

கிளிநொச்சி, ஜூலை 8

எரிபொருள் தட்டுப்பாட்டால் சைக்கிளில் பாடசாலைக்குச் சென்ற அதிபருக்கு பெற்றோரால் எரிபொருள் வழங்கப்பட்டது.

கிளிநொச்சி திருவையாறு மகா வித்தியாலய அதிபர் நேற்றுமுன்தினம் பாடசாலைக்குச் சைக்கிளில் சென்றுள்ளார். அதை அவதானித்த பெற்றோர் அதிபரின் வீட்டுக்குச் சென்று எரிபொருள் வழங்கினர். (ஓ-14,159)



## எரிபொருள் நெருக்கடி எதிரொலி: கார் விற்பனை நிலையங்களில் சைக்கிள்கள் காட்சிப்படுத்தல்!

கொழும்பு, ஜூலை 8

நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டால் கார் விற்பனை நிலையங்கள் சைக்கிள் விற்பனை நிலையங்களாக மாறியுள்ளன.

களுத்துறை அளுத்கம பிரதேசத்திலுள்ள கார் விற்பனை நிலையமொன்றில் கார்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்த இடத்தில் தற்போது சைக்கிள்கள் காட்சிப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளன.

எரிபொருள் பற்றாக்குறையால் அதிகளவானோர் கார் மற்றும் மோட்டார் சைக்கிள் பாவனையை நிறுத்தி சைக்கிள் பயன்பாட்டுக்கு மாறியுள்ளனர். இதனால் சைக்கிள் கொள்வனவு நாளுக்குநாள் அதிகரித்துள்ளது.

இதன்காரணமாக கார் மற்றும் மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்வோர் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் அவை காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் இடங்களில் தற்போது சைக்கிள்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன. (ச-இ)

## வரிசையில் காத்திருந்த கர்ப்பிணிக்கு பிரசவம்



கொழும்பு, ஜூலை 8

கடவுச்சீட்டை பெறுவதற்கு வரிசையில் காத்திருந்த பெண்ணொருவர் நேற்று பெண் குழந்தையை பிரசவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள குடிவரவு, குடியகல்வு திணைக்களத்துக்கு முன்பாக கடவுச்சீட்டு பெறுவதற்கு வரிசையில் காத்திருந்தபோது குறித்த கர்ப்பிணிக்கு பிரசவ வலி ஏற்பட்டுள்ளது. அதையடுத்து அவர் அங்கிருந்தோரின் உதவியுடன் பொரளையிலுள்ள காசல் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் குழந்தையைப் பிரசவித்துள்ளார்.

இதேவேளை, கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு அதிகளவான கர்ப்பிணிப் பெண்கள் வரிசையில் காத்திருக்கின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## காவலாளி தாக்கப்பட்டதால் சமிக்ஞை இயக்கப்படவில்லை

### ரயில் சேவை தாமதம்

சாவகச்சேரி, ஜூலை 8

ரயில் கடவைக் காவலாளி தாக்கப்பட்டதால் ரயில் செல்வதற்கான சமிக்ஞை இயக்கப்படவில்லை. இதனால் ரயில் சேவை தாமதமாகியது என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வந்த ரயில், சாவகச்சேரிக்கு செல்வதற்கு சமிக்ஞை கிடைக்காமல், சங்கத்தானை ரயில் நிலையத்தில் 15 நிமிடம் தரித்து நின்றது.

மதுபோதையில் வந்த 20 வயது இளைஞர் ஒருவர் கச்சாய் வீதியிலுள்ள ரயில் கடவைக் காப்பாளரின் அறையில் புகுந்து காவலாளி மீது தாக்குதல் நடத்தியுள்ளார். அதன்போது சங்கத்தானைக்கு வந்த ரயில் சமிக்ஞை கிடைக்காததால் தொடர்ந்து ஒலி எழுப்பியுள்ளது. அதை அவதானித்த பொலிஸார், கடவைக்குச் சென்றபோது காவலாளி தாக்கப்படுவதைக் கண்டு இருவரையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். அதனையடுத்து ரயில் செல்வதற்கான சமிக்ஞை இயக்கப்பட்டது. அதன்பின்னரே 15 நிமிடம் தாமதமாகி ரயில் சென்றது. ரயில் கடவையில் தாக்குதல் நடத்திய இளைஞர், ரயில் கடவைக் காவலாளி இருவரையும் பொலிஸார் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்த்தனர். (ஓ-14,9)

## இறக்குமதி செய்யப்பட்ட 160 ரயில் பெட்டிகளில் 57 பெட்டிகளே பாவனை

கொழும்பு, ஜூலை 8

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 160 ரயில் பெட்டிகளில் 103 பெட்டிகள் இதுவரை பயன்படுத்தப்படாமை குறித்து போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் அதிகாரிகளிடம் கோபா குழு கேள்வியெழுப்பியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற கோபா குழுக்கூட்டத்திலேயே இந்த விடயம் ஆராயப்பட்டுள்ளது.

ரயில்சேவைகளில் சனநெருக்கடியால் தொங்கிய நிலையில் ஆபத்து நிறைந்த பயணங்களை மக்கள் மேற்கொள்வது அறியமுடிகின்றது. இந்த நிலையில் இந்தியாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 160 புகையிரதப் பெட்டிகளில் 57 பெட்டிகளே இதுவரை சேவையில் இணைக்கப்பட்டமை கோபா குழு அதிகாரிகள் வினவினர்.

இதன்போது, நாட்டில் வக்கியூம் பிரேக் முறைமை பயன்படுத்தப்படுகின்றபோதும் சில பெட்டிகள் எயார் பிரேக் முறைமையைக் கொண்டிருப்பது இதற்குக் காரணம் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் அதிகாரிகளும் ரயில்வே அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 31 - 08 - 1948

மறைவு 28 - 06 - 2012



## அமரர் செல்வராசா கௌசலாதேவி

திதி: ஆனிமாத பூர்வபக்க தசமி

தாய் எனும் தீபம் நீ தரணியிலே தீய்ந்து
ஆண்டுகள் இன்றுடன் ஐ இரண்டு ஆகிற்று
நீ ஒளிரும் வரை பாசம் நாம் அறியவில்லை
பாசம் என அறிந்த பின்பு தாய் தந்தை எமக்கில்லை
உடலால் உடல் தந்து உதிரத்தால் உணவு தந்து
உணர்வுகளால் உயிர்தந்து உலகில் எமை நிறுத்தி
உவகை கொள்ள வைத்தவளே எம் உயிர்கள்
- தவழ்கையிலே
தரணியிலே நீ இல்லாது தடுமாறி திரிகிறோம் தாயவளே
- காண்கிறாயோ!
ஆண்டவன் அரவணைப்புடன் அருகிருப்பாய் எமக்கு!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

"அன்பகம்"
இணுவில் கிழக்கு, இணுவில்.

குடும்பத்தினர்.

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த (10.06.2022) சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் வைத்திலிங்கம் சிவானந்தன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (08.07.2022) வெள்ளிக் கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வு 10.07.2022 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச்செய்தியறிந்து நேரிலும், தொலைபேசியூடாகவும் எமது துயரத்தில் பங்குகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தாருங்கள்.

டச்சு வீதி,
மானிப்பாய்.

அன்னாரின் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(2.6)

# யாழ்ப்பாணத்தில் இயங்கும் 50 வருட அனுபவத்தைக் கொண்ட

1972 2022

**Baby Photo**
PRINTING SOLUTIONS
91, Palaly Road, Thirunelvely, Jaffna.
021 222 6912, 0761419308

**Opening Ceremony**
Saturday
09.07.2022
am
9.00 - 11.00

Baby Photo நிறுவனமும் அதன் இணை நிறுவனமாகிய Arissona நிறுவனமும் அதி உயர் Digital தொழில்நுட்பத்துடன் ஆரம்பமாகின்றது...

**ARISSONA** (PVT) LTD
ADVERTISING & PUBLICATION
93, Palaly Road, Thirunelvely, Jaffna.
021 222 3222, 076 141 9307
www.arisona.com | info.arisona.com

எமது நிறுவனங்களின்

## திறப்பு விழா

சனிக்கிழமை 09.07.2022
காலை 9.00 முதல் 11.00 வரை

## விசேட சலுகை

- அல்பம் பிறிண்ட் செய்பவர்களுக்கு தங்களுடைய Studio பெயர் பதித்த Pendrive, Mug இலவசமாக வழங்கப்படும்.

இந்தச் சலுகைகள் குறித்த தினத்தில் மட்டும் வழங்கப்படும்.

- அல்பம் பிறிண்ட் செய்பவர்களுக்கு 10% விசேட விலை சலுகை வழங்கப்படும்.

நிபந்தனைகளுக்குட்பட்டது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## போராட்டங்களும் வன்முறைச் சாயமும்

இந்த நாட்டில் ஆட்சியாளர்கள் எப்போதுமே ஒரே வகையினர்தான். அவர்களுக்கு எதிராக எவர் திரும்பினாலும் அவர்களை ஒடுக்க கையாளும் யுக்திகளும் ஒரே மாதிரியானவைதான். அன்று தமிழ் மக்களின் அகிம்சைப் போராட்டங்களை அடக்குவதற்கு பிரயோகித்த வழிமுறைதான், இன்று சிங்கள மக்களுக்கு எதிராகவும் திரும்பியிருக்கின்றது.

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்கான மக்கள் போராட்டங்கள் வெடிக்கத் தொடங்கியதுமே, அது தொடர்பில் முன்னெச்சரிக்கையுடன் இருந்த ஆட்சியாளர்கள், மக்களின் அகிம்சைப் போராட்டங்களுக்கு வன்முறைச் சாயம் பூசி அடக்கி ஒடுக்குவதற்கான நடவடிக்கைகளைத்தான் எடுத்திருக்கின்றார்கள்.

மிரிஹானாவில் அமைந்துள்ள ஜனாதிபதியின் இல்லத்துக்கு முன்பாக மார்ச் 31ஆம் திகதி முதலாவது மக்கள் போராட்டம் எழுச்சி கொண்டது. அந்தப் போராட்டத்தின்போது பேருந்து எரியூட்டப்பட்டது. உடனடியாக அவசரகாலச் சட்டத்தை ஜனாதிபதி பிறப்பித்திருந்தார். பேருந்து எரியூட்டப்பட்டபோது பல நூற்றுக்கணக்கான படையினர் பார்த்திருந்தனர். இந்தச் சம்பவத்தில் பேருந்தை எரியூட்டியதாக கைது செய்யப்பட்டவர் பிணையிலும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அலரிமாளிகையில் அப்போதைய பிரதமர் மஹிந்தவின் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மே 9ஆம் திகதி அமைதிவழிப் போராட்டக்காரர்கள் மீது மிகக் கொடூரமான தாக்குதலை நடத்தினார்கள். பதிலுக்கு அமைதிவழிப் போராட்டக்காரர்களும் தாக்குதலை நடத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்தச் சம்பவத்தில் போராட்டக்காரர்கள் மீது தாக்குதலை நடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் அசமந்தம் காட்டப்படுகின்றது. அத்துடன் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாக மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மீது இன்னமும் நடவடிக்கை எடுக்கப்படாத நிலைமை தொடர்கின்றது.

இதனிடையே நாளை 9ஆம் திகதி அரசாங்கத்துக்கு எதிரான மாபெரும் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எரிபொருள் தட்டுப்பாட்டால் விரக்தி நிலையின் விளிம்பில் இருக்கும் மக்கள் இயல்பாகவே போராட்டத்தில் பேரெழுச்சியாகக் கலந்து கொள்வார்கள். அதனைவிட நேற்றுமுன்தினமும், நேற்றும் நாடெங்கிலும் ஆங்காங்கே நடைபெறுகின்ற போராட்டங்களும், நாளைய போராட்டத்தின் வீரியத்தை எடுத்தியம்புகின்றன.

இந்த நிலையில்தான் கடந்த சில தினங்களாக அரசாங்கத் தரப்புக்கள் திட்டமிட்ட சில நகர்வுகளை முன்னெடுத்துள்ளன. போராட்டத்துக்கு வன்முறைச் சாயம் பூசுவது அல்லது வன்முறையைத் தூண்டி விடுவது என்கின்ற மிகமோசமான கடைந்தெடுத்த பிற்போக்குத்தனத்தை செயலுருவாக்க முனைகின்றன.

அதனடிப்படையில்தான், கரும்புலிகள் நாளை முன்னிட்டு குண்டுத்தாக்குதல் நடத்தப்படலாம் என்ற தகவல் உலாவ விடப்பட்டது. பொலிஸ்மா அதிபரால் பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கு முன்னெச்சரிக்கைக் கடிதம் அனுப்பப்பட்டது. இந்தச் சதியை ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார அம்பலப்படுத்தி அதனைப் பிசுபிசுக்கச் செய்தார்.

ஆனால் அரசாங்கமோ, சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் போல மீண்டும் மீண்டும் வன்முறையைத் தூண்டும் வகையில் செயற்பட முனைகின்றது. பெற்றோல் குண்டு எவ்வாறு தயாரிப்பது என்று விளக்கமளிக்கும் காணொலியும், நாளைய போராட்டத்துக்கு பெற்றோல் குண்டுகளைக் கொண்டு வந்து ஜனாதிபதி மாளிகையை தாக்குமாறு அழைப்பு விடுக்கும் காணொலியும் சமூக ஊடகங்களில் பரவிவருகின்றது.

முற்றுமுழுதாக அமைதிப் போராட்டத்தை குழப்பியடித்து, தனக்கு எதிரான மக்கள் திரட்சியை திசை திருப்ப அரசாங்கம் போடும் நாடகங்கள் இவைதான் என்பது மக்களுக்குப் புரியாததல்ல. அப்படியிருந்தும் போராட்டங்களுக்கு வன்முறைச் சாயம் பூசி அவற்றை ஒடுக்கும் கைங்கரியத்தை ஏதோ ஒரு விதத்தில் முன்னெடுக்கவே அரசாங்கம் முயல்கின்றது.

கடந்த காலங்களில் தமிழ் மக்கள் மீது இத்தகைய முயற்சிகள் முன்னெடுக்கப்படும்போது, சிங்கள மக்கள் தட்டிக் கேட்டிருந்தால் இன்று இந்த நிலைமை வந்திருக்குமா?

### நாளொரு நல்வார்த்தை

"எதிர்மறை எண்ணங்களை அகற்றுங்கள். உங்களால் முடியாது என்று நினைத்தால் முடியாது. உங்கள் அவநம்பிக்கை வெற்றியைத் தடுத்துவிடும்" - புரூஸ் லீ




# எரிபொருளை வழங்க இந்தியா கைவிரித்தது

**கொழும்பு, ஜூலை 8**

**இலங்கைக்கு கடனுதவித் திட்டத்தின் கீழ் மேலும் எரிபொருளை வழங்குவதற்கு முன்கூட்டியே பணத்தை பெற இந்தியா எதிர்பார்க்கிறது என இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

இலங்கை அரசாங்கம் எதிர்கொண்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி மற்றும் டொலர் பற்றாக்குறையால் இந்தியாவிடமிருந்து கடனுதவியின் கீழ் எரிபொருளை பெற முன்வந்தது.

இந்த நிலையில் இந்தியாவுடன் மேற்கொள்ளப்பட்ட கடன் உடன்படிக்கைகள் முடிவடைந்ததால் கடனில் பெற்றோல் மற்றும் டீசல் ஆகியவற்றை வழங்குவதை இந்தியா நிறுத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் பேச்சாளர் தெரிவிக்கையில்,

மேலும் எரிபொருள் கொள்வனவுக்கான 500 மில்லியன் டொலர் கடன் எல்லை வசதிக்கான புதிய அனுமதியை இலங்கை எதிர்பார்க்கிறது.

ஏற்கனவே உணவு, மருந்துகள் மற்றும் எரிபொருளுக்காக கடந்த சில மாதங்களில் 3.5 பில்லியன் டொலர் கடன் எல்லையை இந்திய அரசாங்கம் இலங்கைக்கு வழங்கியுள்ளது.

கடந்த மார்ச் மற்றும் ஜூன் மாதங்களுக்கு இடையில் ஐ.ஓ.சியிடமிருந்து சுமார் 4 லட்சத்து 50 ஆயிரம் தொன் பெற்றோல் மற்றும் டீசல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (ச-இ)

# பதவியைக் காப்பாற்றுவதற்காகவே நாடாளுமன்றம் வந்தார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூலை 8

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மக்களுக்குத் தீர்வுடன் நாடாளுமன்றம் வரவில்லை. மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை நாடாளுமன்றத்துக்கு வரவேண்டும் என்ற சம்பிரதாயத்துக்காகவும், தனது பதவியைக் காப்பாற்றவுமே வந்தார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய சூழ்நிலையில் ஜனாதிபதி வீதியில் தனியாக நடந்து சென்றாலோ அல்லது ஏதேனுமொரு எரிபொருள் நிரப்புநிலையத்துக்கு அண்மையில் இறங்கினாலோ அவருக்கு என்ன நேரும் என்பதைக் கூறமுடியாத நிலையேற்பட்டிருக்கின்றது.



எரிபொருள் வரிசையில் நீண்டநேரம் காத்திருக்கச் செய்து, உடலியல் ரீதியிலும் உளவியல் ரீதியிலும் வலுவிழக்கச்செய்வது படுகொலைக்கு ஒப்பானது - என்றார். (ம)

09.07.2022
சனிக்கிழமை
ஆனி 25

சுபநேரம் : 02.58 - 04.28
ராகுகாலம்: 08.58 - 10.28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** நினைத்ததை நடத்தி முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் உங்களின் செல்வாக்கு உயரும். தடைகளை விலக்கி செயற்படுவீர்கள். உங்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

**இடபம்:** சொத்து வாங்கும் முயற்சி தள்ளிப்போகும். பெற்றோரின் ஆதரவால் நிதிநிலை உயரும். குடும்பத்தினரின் நலனில் அக்கறை கொள்வீர்கள். ஆதாயம் காண்பீர்கள்.

**மிதுனம்:** அரசு வழியிலான முயற்சிகள் ஆதாயத்தை உண்டாக்கும். உங்கள் கோரிக்கை நிறைவேறும். முயற்சியின் வழியே பலன் அடைவீர்கள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

**கடகம்:** துணிச்சலுடன் செயற்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். ஆதாயம் அதிகரிக்கும். பொதுநல முயற்சி ஒன்றில் ஈடுபடுவீர்கள். மற்றவர்களின் பாராட்டுக்கு ஆளாவீர்கள். வெற்றி காண்பீர்கள்.

**சிம்மம்:** கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளைச் சரி செய்வீர்கள். வருமானத்துக்கான முயற்சி லாபமாகும். பணம் பல வழிகளில் செலவாகும்.

**கன்னி:** வருமானத்தை அதிகரிப்பதற்காக புதிய முயற்சி ஒன்றில் ஈடுபடுவீர்கள். உங்களது எண்ணம் பூர்த்தியாகும் நாள். நீங்கள் ஈடுபடும் செயலில் வெற்றி அடைவீர்கள்.

**துலாம்:** வெளியூர் பயணமும், அலைச்சலும் ஏற்படும். முயற்சிகள் தாமதமாகும். விரும்பிய செயல்களில் தடையும் தாமதமும் ஏற்படும். கவனமுடன் செயற்பட வேண்டியநாள். குடும்பத்தினர் வகையில் திடீர் செலவுகள் தோன்றும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்தவற்றில் ஆதாயம் காண்பீர்கள். புதிய முயற்சிகள் இன்று வேண்டாம். வேலைக்காக முயற்சித்தவர்களுக்கு அழைப்பு வரும். நீண்டநாள் முயற்சி ஒன்று நிறைவேறும்.

**தனுசு:** தொழிலில் எதிர்பார்த்த வருமானம் உண்டாகும். கவனமாகச் செயற்பட வேண்டிய நாள். வழக்கமான வருமானம் தடையின்றி வரும். பணியாளர்கள் தங்களுடைய பணியில் மட்டும் கவனம் செலுத்தவேண்டும்.

**மகரம்:** இழுபறியாக இருந்த ஒரு செயல் இன்று நிறைவேறும். எதிலும் பலமுறை யோசித்து செயற்படுங்கள். அவசர செயல்கள் பிரச்சினையில் முடியும். நிதிநிலை சீராகும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் இன்று வேண்டாம். பணிகளிலும் விழிப்புணர்வு அவசியம். வெளியூர் பயணங்களில் கவனம் தேவை. எதிர்பார்ப்புகள் இழுபறியாகும்.

**மீனம்:** உற்சாகம் அதிகரிக்கும். நீங்கள் விரும்பியவற்றை அடைவீர்கள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பணியிடத்தில் செல்வாக்கு உயரும். கவனத்துடன் செயற்பட்டு விரும்பியதை அடைவீர்கள்.

# குருபூசையும் சொற்பொழிவும்

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ். மாவட்ட அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும்' என்ற தொடரின் 28ஆவது சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தொண்டமானாறு ஞானக்கண்மணி அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வில் நாவலர் குருபூஜை மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து, "நாவலர் பெருமானின் நூற்பணிகள்" என்னும் தொனிப்பொருளில் சைவப்புலவர் செ.கந்த சத்தியதாசன் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ய)



கிளிநொச்சி - உதிரவேங்கை வைரவர் ஆலயத்தின் வருடாந்த ஆனி உத்தர பொங்கல் விழா கடந்த திங்கட்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. இங்கு காவடி, பாற் செம்பு மற்றும் தீ மிதிப்பு நிகழ்வும் இடம்பெற்றது. (ய-214)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஜூலை 8

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக, நாட்டு மக்களுக்கு சுபீட்சமானதொரு வாழ்வு வாழ்வு வேண்டி, நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம்- உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ கு.சேவற்கொடியோன்குருக்களின் அருளாசியுரையும், வேதபாராயண நிகழ்வும் நடைபெறவுள்ளது. (ய)

# சொற்பொழிவு

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் வாராந்தச் சிறப்புச்சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆலயத்தின் சண்முக விலாச மண்டபத்தில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. சிறப்பு சொற்பொழிவை இளம்சைவப்புலவா ச. நவநீதன் "நன்றி மறப்பது நன்றன்று" என்னும் தொனிப்பொருளில் ஆற்றவுள்ளார். (ய)

# எரிபொருள் நிலையங்களுக்கு பாதுகாப்பு வேலிகள்

யாழ்ப்பாணத்திலுள்ள பல எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குள் எவரும் உட்செல்ல முடியாதவாறு இரும்பிலான பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் எரிபொருள் நிலையங்களுக்கு கண்காணிப்புக் கமராக்களும் பொருத்தப்பட்டு வருகின்றன.

தற்போதைய எரிபொருள் தட்டுப்பாட்டால் எரிபொருள் நிலையங்களில் ஏற்படும் குழப்பங்கள், முரண்பாடுகளைத் தவிர்க்கும் முகமாக இந்த நடவடிக்கையை எரிபொருள் நிலையங்கள் மேற்கொண்டு வருகின்றன. (ஒ-14-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் அதிகாரங்கள் '22'இல் பலப்படுத்தப்பட்டுள்ளன



கொழும்பு, ஜுலை 8

ஒட்டுமொத்த மக்களும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை பதவி விலகுமாறு வலியுறுத்தும் போது ஜனாதிபதியின் அதிகாரத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் அரசமைப்பின் 22ஆவது திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ரஞ்சித் மத்தும பண்டார மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவேன் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கடந்த மே மாதம் 11ஆம் திகதி குறிப்பிட்டார். 19ஆவது திருத்தம் என்ற முகத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட 22ஆவது திருத்தம் பொதுஜன பெரமுனவின் திருத்தங்களுடன் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. முழு நாட்டு மக்களும் ஜனாதிபதி கோத்தாபயவை பதவி விலகுமாறு ஒன்றிணைந்து வலியுறுத்தும்போது ஜனாதிபதியின் அதிகாரங்களை மேலும் வலுப்படுத்தும் வகையில் அரசமைப்பின் 22ஆவது திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது - என்றார். (ம)

# மருந்துத் தட்டுப்பாடு 2 வாரத்தில் நீங்குமாம்



நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்துப் பொருள்களுக்கான தட்டுப்பாட்டை இரண்டு மாதங்களில் தீர்க்க முடியும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் ஏற்பட்டிருக்கும் டொலர் தட்டுப்பாடே மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான பிரதான காரணமாகும். என்றாலும் எமது நட்பு நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் ஊடாக 75 மில்லியன் டொலர் பெறுமதியான மருந்துகள் கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதேபோல் சுகாதார சேவையுடன் தொடர்பான 31 மில்லியன் டொலர் நன்கொடை வழங்கப்பட்டுள்ளது. உலக வங்கியின் ஊடாக 73 மில்லியன் டொலரும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஊடாக 66 மில்லியன் டொலரும், இந்திய கடன் உதவி திட்டத்தின் கீழ் 200 மில்லியன் டொலரும், ஆசிய அடிப்படை வசதிகள் முதலீட்டு வங்கியின் மூலம் 100 மில்லியன் டொலரும் உதவியாகக் கிடைத்துள்ளன -என்றார். (ம)

# மிஸ்டர் க்ளீன்; மிஸ்டர் பீன்!



கொழும்பு, ஜுலை 8

நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க அதிகாரத்துக்கு வந்ததாக கூறும் ரணில், பொறுப்புள்ள பிரதமராக மக்களின் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பதை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். மாறாக மிஸ்டர் பீன் போன்று செயற்பட வேண்டாம் என மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே விஜித கேரத் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் 23ஆம் திகதி எரிபொருள் கப்பல் வருவதாக அமைச்சர்கள் இந்த சபையில் தெரிவித்திருந்தனர். ஆனால் தற்போது அந்தக் கப்பல் வருவது தொடர்பில் எந்த நம்பிக்கையும் இல்லை. அதனால் நாடாளுமன்றத்தை பிழையாக வழிநடத்திய அமைச்சர்களுக்கு எதிராக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கை என்ன என்றார்.

இதற்கு பதிலளித்த பிரதமர், 'அரசாங்கத்தை பொறுப்பேற்கின்றீர்களா? இல்லையா? என்பதற்கு மாத்திரம் பதில்கூறுங்கள். உங்களின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க பொறுப்பேற்பதில்லை எனத் தெரிவித்தார். நீங்கள் பொறுப்பேற்பதாக கூறினீர்கள். இந்த இரண்டில் ஒன்றைக் கூறுங்கள்' -என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த விஜித்த ஹேரத், மிஸ்டர் பீன் போன்று செயற்படாது, பொறுப்புள்ள பிரதமராக மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுத்திருக்கும் நடவடிக்கையை கூறுங்கள்.

மிஸ்டர் பீன் போன்று செயற்படுவதாக இருந்தால் எதிர்க்கட்சிக்கு வந்து அமர்ந்துகொள்ளுங்கள். நீங்கள் தற்போது நாட்டின் பொறுப்புமிக்க பிரதமர். அதனால் மக்களின் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளியுங்கள் -என்றார். (ம)


## கண்ணீர் அஞ்சலி



அமரர்
**காசிப்பிள்ளை ஆறுமுகம் தியாகராசா**
(முன்னாள் தலைவர்,
மரபு வழி அறங்காவலர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் அறங்காவலர் சபை.)

அவர்கள் அம்பாளுடைய மஹோற்சவ காலத்துள் இவ் உலகை விட்டுப் பிரிந்து அம்பாளுடைய பாதார விந்தங்களை அடைந்துவிட்டார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா அம்பாளின் பாதங்களில் சாந்தி பெற இறைஞ்சுகின்றோம்.

**பணியாளர்கள்.**
**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்.**

## 29ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12 . 03 . 1941 | 08 . 07 . 1993 |



அமரர்
**சிதம்பரி மகேந்திரன்**
(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

ஆண்டாண்டு தோறும் ஆழுது புரண்டாலும்
மாண்டார் மீண்டு வருவதில்லை- மேதினியில்
மேன்மையுறு நீதி கொண்டு வாழ்ந்தோர் - பெருமை
மாண்டபின்னரும் மாளாது வளர்ந்திடுமே!
ஆண்டுகள் இருபத்தொன்பது ஆயிடினும்
மாறவில்லை உம் நினைவுகள்
காய்ந்திடாத விழிகளின் ஈரத்துடன்
வேண்டுகின்றோம் உம் ஆன்ம - அமைதிக்காய்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நாகம்மாள் வீதி,
உடுவில்
(CS 45402) (3/6)
குடும்பத்தினர்

கணபதி துணை



## புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் தேவஸ்தானம்

✣ வசந்தோற்சவம் (08.07.2022 வெள்ளி)
✣ வேட்டைத் திருவிழா (10.07.2022 ஞாயிறு)

## திருவிழா விஞ்ஞாபனம்

1. ஆயாக்கடவை சித்தி விநாயகர் மெய்யடியார்களே! இன்று (08.07.2022) வெள்ளிக்கிழமை பி.ப 7.00 மணி வசந்த உற்சவத் திருவிழா நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

**அவ்வமயம்**
**இணுவில் S.K. உதயநாதன் குழுவினரின் சிறப்பு நாதஸ்வர தவில் கச்சேரி நடைபெறும்**



2. எதிர்வரும் 10.07.2022 ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணிக்கு வேட்டைத் திருவிழாவைத் தொடர்ந்து திருவிழா நிகழ்வு நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

**அவ்வமயம் மறைந்தும் மறையா தவில் உலக மாமேதை இணுவையூர் அமரர் N.R. சின்னராஜாவின் புதல்வன் "லயஞான விவகார் சிரோன்மணி" N.R.S. சுதாகரன் குழுவினரின் விஷேட மேளக் கச்சேரி நிகழ்வு மாலை 6.00 மணி முதல் இடம் பெறவுள்ளது.**



அவ்வமயம், அடியவர், எம் ஊர்மக்கள் அனைவரும் ஆயாக்கடவையானை வழிபட்டு இஷ்ட சித்திகளைப் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வீராக !!!

**உடையார் குடும்பம்,**
**உடையார் வளவு,**
**புன்னாலைக்கட்டுவன் தெற்கு.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கற்றல் உபகரணம் வழங்க பதிவுகள் சேகரிப்பு

மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரிவோரின் குடும்பங்களில் கற்கும் மாணவர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்குவதற் கான பதிவுகள் அந்தந்தப் பிரதேச செயலகங்களில் சேகரிக்கப்பட்டு வருகின்றன. மாணவர்களின் விவரங்கள் தொடர்பான படிவத்தைப் அந்தந்த பிரதேச செயலகங்க ளில் பெற்று பூர்த்தி செய்து பாடசாலை அதிபரின் பரிந்துரையுடன் இன்று வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தினர், மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரிவோரின் குடும்பங்க ளில் கற்கும் மாணவர்களுக்கு வருடந்தோ றும் கற்றல் உபகரணங்கள் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-14.9)


# மரண அறிவித்தல்



தோற்றம் 10 . 12 . 1928

மறைவு 07 . 07 . 2022

## திருமதி திருப்பதி அம்மா தம்பிஜயா

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, ஐயனார் கோயிலடியை பிறப்பிடமாகவும், அவுஸ்ரேலியா (சிட்னி) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருப்பதி அம்மா தம்பிஜயா நேற்று (07.07.2022) வியாழக்கிழமை அதிகாலை சிட்னி, அவுஸ்ரேலியாவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் ஆருயிர் மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் தம்பிஜயா (திருப்பதி ஸ்டோர் உரிமையாளர், பாலத்துறை, கொழும்பு) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான CS. குமாரசுவாமி, CS. பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற CM. சின்னத்துரை (கிளிநொச்சி) அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரியும், காலஞ்சென்ற முகுந்தகுமார் மற்றும் திலககுமாரி (ராணி), தேவகுமாரி (வான்மதி), ஸ்ரீகந்தகுமார், சாந்தகுமாரி, ரவீந்திரகுமார், வசந்தகுமாரி, காலஞ்சென்ற சிவகுமார், மற்றும் ஸ்ரீதிருப்பதிகுமார் ஆகியோரின் அருமைத் தாயாரும், சண்முகன், இரட்ணவேல், மதிமாலா, சிவானந்தராஜா, குகபாலன், சித்ராம்பரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிரசாந், லக்சாந், ரஜீவ்சாந்த், நிரூபா, கேசவா, அஸ்வினி, யதூஷன், தனூஷன், விமலன், கீர்த்தனா, சாஹிஷ்ணு, சர்வனி ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், கேஷ், அமடா, சுவாதி, நிவ்யா, லாவியா, நிக்கோல் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (8.7.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 12.30 முதல் Pinegrove Memorial park Kington St,Minchinbury எனும் இடத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
ஸ்ரீ - +61 425 206 945
ரவி - +61 403 282 921
குமார் - +61 412 780 735

(cs.19924) (2.6)

தகவல் :
குடும்பத்தினர்



# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 19.08.1931

மறைவு 22.06.2018

## அமரர் செல்லத்துரை சோதிப்பெருமாள்

திதி : ஆனிமாத பூர்வபக்க தசமி

அழுதவிழி காயவில்லை ஆண்டு நான்காயிற்று
ஈன்றவளும் நீருமின்றி கதிகலங்கி நாமிங்கு
உடையவனை இழந்து நிற்கும் உற்றாரும் சுற்றமுமாய்
அனுதினமும் உனைநினைத்து ஏங்குகிறோம் ஐயா!
ஐயா ஐயா என ஆண்டவனாய் நாம் உம்மை
ஐயமின்றி அழைத்ததாலோ எமைவிட்டு அங்கு சென்றீர்
ஐயனும் அம்மையுமின்றி அநாதைகளாய் நாம் இங்கு
ஐயனவன் இணுவை கந்தனிடம் உன் ஆத்ம சாந்திக்காய்
பிரார்த்திக்கும்

சரஸ்வதி மஹால்,
மஞ்சத்கடி தெற்கு இணுவில்

(CS 45492) (3/6)

குடும்பத்தினர்



# கண்ணீர் அஞ்சலி



## அமரர் காசிப்பிள்ளை ஆறுமுகம் தியாகராசா

(முன்னாள் தலைவர், மரபு வழி அறங்காவலர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் அறங்காவலர் சபை. ஓய்வு நிலை உதவி அரசாங்க அதிபர் வேலணை)

சரித்திரப் பிரசித்தி பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலின் அறங்காவலர் சபையில் மரபுவழி அறங்காவலராகவும் நீண்டகாலம் தலைவராகவும் திகழ்ந்து இக்கட்டான காலகட்டத்தில் கோயிலின் நித்திய, நைமித்திய கிரியைகள் தொய்வின்றி ஒழுங்காக நடைபெறுவதற்கு முன்னின்று வழிநடத்தியவரும் ஆலய வளர்ச்சியில் அயராது உழைத்தவரும் தனது திருமுறைப் பண்ணிசையால் அம்பாளுக்கு இசையர்ப்பணம் செய்தவரும் நயினை மக்களின் காவலனாகத் திகழ்ந்தவருமான நயினை பெற்ற பெருமகன் கா.ஆ.தியாகராசா அவர்கள் அம்பாளுடைய மஹோற்சவ காலத்துள் இவ் உலகை விட்டுப் பிரிந்து அம்பாளுடைய பாதார விந்தங்களை அடைந்துவிட்டார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா அம்பாளின் பாதங்களில் சாந்தி பெற இறைஞ்சுகின்றோம்.

அறங்காவலர் சபை
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி
அம்மன் கோயில்.



# மரண அறிவித்தல்



மண்ணில் 08 . 04 . 1937

விண்ணில் 07 . 07 . 2022

## திருமதி சரஸ்வதிப்பிள்ளை தவராசா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதிப்பிளளை தவராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) நேற்று (07.07.2022) வியாழக்கிழமை இறைவடின சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், தவராசா (ஓய்வுபெற்ற அதிபர், யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை) அவர்களின் அன்பு மனைவியும், அன்பரசி (ஆசிரியர், யா / அத்தியார் இந்துக் கல்லூரி), குகவரதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், நிசாகரன் (Browns Agriculture), அமிர்தினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், சூர்யா (ஜேர்மனி), சைந்தவி (ஜேர்மனி), சாருஜன் (ஜேர்மனி), சோபவித்யன், கேதாகரன் (மாணவர்கள், JHC), கவினயா (ம்ாணவி யா/ இ.ஆ.பா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான யோகம்மா, கணேசபிள்ளை, நடேசபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, சிவமணி மற்றும் சகுந்தலாதேவி (சுவிஸ்), பத்மநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2022) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியள வில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

“[illegible]”
பருத்தித்துறை வீதி,
கட்டப்பிராய், யாழ்ப்பாணம்.

(cs.45494) (2.6)

தகவல் :
கா.தவராசா (கணவர்),
க.நிசாகரன் (மருமகன்),
077 284 2433


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்துகளின் உதிரிப்பாகங்களை இறக்குமதிசெய்வதில் சிக்கல்நிலை

## ஆபத்தாக மாறும் மக்கள் பயணங்கள் கோபா குழுவில் அவதானம்

கொழும்பு, ஜூலை 8
இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகளுக்கான உதிரிப்பாகங்களின் விலை அதிகரிப்பால் அவற்றை இறக்குமதி செய்வதில் ஏற்பட்டுள்ளசிக்கல்நிலைதொடர்பில் கோபாகுழு அவதானம்செலுத்தியுள்ளது.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களின் தற்போதைய நிலவரம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் ஆராயும் நோக்கில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவான கோபா குழுவின் கூட்டம் அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர்பேராசிரியர்திஸ்ஸவிதாரண தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதுதொடர்பில் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில்,

நாட்டின் பொருளாதார நெருக்கடிச் சூழ்நிலையில் மக்களுக்கு வினைத்திறனான ஆபத்தற்ற முறையில் போக்குவரத்தைவழங்குதல்வேண்டும்.

தற்போது பொருள்களின் விலையுயர்வுகளால் இ.போ.ச. பேருந்துகளுக்கான ரயர் உள்ளிட்ட ஏனைய உதிரிப்பாகங்களைஇறக்குமதிசெய்வதில் சிக்கல்கள் தோன்றியுள்ளன.

இவற்றுக்கான கேள்விப் பத்திரங்களைக் கோரி அவற்றின் ஊடாக கொள்முதல் செயற்பாடுகளை மேற்கொள்வதில் சிக்கல் உள்ளது.

அத்துடன் பயன்பாட்டில் உள்ள பேருந்துகளின் தரம் மற்றும் அவற்றை இயக்குவதில் காணப்படும் பிரச்சினைகள் குறித்தும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் அதிகாரிகள் குழுவுக்கு சுட்டிக்காட்டினர்.

அரசின் போக்குவரத்து சேவையை மேலும் விஸ்தரிக்கவேண்டியுள்ள போதும், தற்பொழுது காணப்படும் சூழ்நிலையின் கீழ் விலை அதிகரிப்புக் காணப்படுவதால் உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்வதில் சிக்கல்கள் காணப்படுகின்றன என அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் ஆராய்வதற்காக அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு கோபா குழு பணிப்புரை விடுத்துள்ளது.

இதேவேளைமக்கள்தற்போது அதிகமாகபொதுப்போக்குவரத்தைபயன்படுத்தும்நிலையில்பாவனையிலுள்ள பேருந்துகள் சிலவற்றின் மிதிபலகைள்உடைந்துமக்களின்பயணங்கள் ஆபத்தாக மாறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச-இ)

### வெதுப்பக...

தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பாண் உட்பட வெதுப்பக உற்பத்திகளை உற்பத்தி செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

எமக்கான டீசலைப் பெற்றுத் தரக்கோரிப் பல தடவைகள் கோரிக்கைகள் விடுக்கப்பட்டபோதும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலைமையில் எம்மால் வெதுப்பகப் பொருள்களை உற்பத்தி செய்ய முடியாது. டீசலைப் பெறுவதற்கான இறுதி முயற்சியாக நாம் இராணுவத்தினரின் உதவியை நாடவுள்ளோம் - என்றார். (அ-எ-இ)

### டீசல்...

யாழ்ப்பாணம் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கத்தின் செயலாளர் கே.பாஸ்கரன் தெரிவித்ததாவது:-

மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு எம்மிடம் டீசல் உள்ளவரையில் உற்பத்திகளைத் தொடருவோம். எமக்கும் டீசல், பெற்றோல் பற்றாக்குறையாகவேயுள்ளது. அத்தியாவசிய சேவையாகக் கருதி எமக்கும் டீசல், பெற்றோல் விநியோகிக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளோம் - என்றார். (அ-எ-5)

### போராட்டங்களை...

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன, இராணுவத் தளபதி லியனகே ஆகியோருடன் ஜனாதிபதி தலைமையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது என்றும், அதில் இது தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டது என்றும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கலந்துரையாடலில் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படாதபோதும், நாட்டில் அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் சாத்தியங்கள் அதிகமுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, இன்று வெள்ளிக்கிழமை சுகாதாரத் துறையினருக்கு எரிபொருள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அது திடீரென நிறுத்தப்பட்டுள்ளது. இராணுவத்தினருக்கும், பொலிஸாருக்கும் திடீரென எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாலேயே சுகாதாரத் துறையினருக்கு எரிபொருள் வழங்கப்படவில்லை என்ற ஒரு தகவலும் கசிந்துள்ளது. (அ-எ-இ)

### வாகன...

தேவையற்ற காத்திருப்பைத் தவிர்க்கும் நோக்குடன் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக செயலாளர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் காத்திருக்கும் 400 முச்சக்கர வண்டிகள், 100 கார்கள், ஆயிரம் மோட்டார் சைக்கிள்களின் இலக்கங்கள் பதிவு செய்யப்பட்டு அந்த ஒழுங்கில் எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளது.

இந்த எண்ணிக்கைக்கு மேலதிகமாகக் காத்திருக்கும் வாகனங்களின் இலக்கங்கள் பதிவு செய்யப்பட்டு, உரிமையாளர்களின் கைபேசி இலக்கமும் பதிவு செய்யப்படும். அவர்களுக்கான எரிபொருள் வழங்கும் திகதி முதல் நாள் குறுஞ்செய்தி ஊடாகத் தெரியப்படுத்தப்படும்.

அவர்களுக்குரிய நாளில் எரிபொருள் நிரப்பு நிலையம் வந்து அவர்கள் எரிபொருள் நிரப்ப முடியும். இதனால் தேவையற்ற காத்திருப்பைத் தவிர்க்க முடியும். ஜூலை முதலாம் திகதிக்கு முன்னர் ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையத்தில் எரிபொருளைப் பெற்றுக்கொண்டவர்கள் இந்தமுறை எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியும். ஜூலை முதலாம் திகதிக்குப் பின்னர் எரிபொருளைப் பெற்றுக்கொண்டவர்கள் தற்போது பெற முடியாது என்றும் யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக செயலர் தெரிவித்தார். (அ-எ-20)

### திடீரென...

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டையில் நேற்று நடந்துள்ளது.

நேற்றுக் காலை 6 மணிக்கு காரைநகர் சாலையில் இருந்து புறப்பட்ட 786 வழித்தட பஸ்ஸின் மிதிபலகையே ஆனைக்கோட்டை மூன்றாம் பாலத்தடியில் கழன்று வீழ்ந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த காரைநகர் இ.போ.ச. சாலை முகாமையாளர் குணசீலன், அதிகளவு பயணிகள் மிதிபலகையில் நின்று பயணித்தமையே இதற்குக் காரணம் என்று தெரிவித்தார்.

பஸ்களில் பொதுமக்கள் மிதிபலகையில் நின்று பயணிப்பதைத் தவிர்க்க வேண்டும் என்று தெரிவித்த அவர், இது தொடர்பாக பொலிஸாருக்கும் அறிவித்துள்ளோம் என்றும் குறிப்பிட்டார். (அ-எ-125)

### எரிபொருள்...

வில்லை என்று குற்றஞ்சாட்டினர்.

எரிபொருள் நிரப்பு நிலையப் பம்பி பழுதடைந்து விட்டது என்று தெரிவித்து எரிபொருள்விநியோகம்நிறுத்தப்பட்டுள்ளது என்றும், பம்பியைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

எரிபொருள் பம்பியைத் திருத்துபவர் புத்தளத்தில் இருந்து வருவதால் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் தெரிவித்தார்.

பம்பி திருத்தப்பட்டு நாளை (இன்று) எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்படும் என்று மக்களிடம் தெரிவித்ததை அடுத்து, மக்கள் போராட்டத்தைக் கைவிட்டனர். (அ-எ-27)

### சுகாதாரத்துறைக்கு...

தற்போதைய நிலைமையைக் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும், பெற்றோல் விநியோகிக்கப்படும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

### பணவீக்கம்...

நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது 50 வீதமாக உள்ள பணவீக்கம் எதிர்வரும் மாதங்களில் 70 வீதமாக அதிகரிக்கலாம். பண வீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். அதிக பணவீக்கம் காணப்பட்டால் எவரும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத நிலையேற்படும். நலிந்தவர்களும் ஏழைகளும் அதிகம் பாதிக்கப்படுவார்கள் - என்றார். (அ-எ-இ)

### டெங்குத்...

இளைஞனின் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை நேற்று வெளியான நிலையில், இளைஞரின் உயிரிழப்புக்கு டெங்குத் தொற்றே காரணம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை, ஆத்தியடியைச் சேர்ந்த [illegible] (வயது-21) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞருக்குச் சில நாள்களாகக் காய்ச்சல் காணப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. கடந்த செவ்வாய்க்கிழமை உடல் நலம் பாதிக்கப்பட்டதை அடுத்து அவர் வீட்டில் இருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றில் கொண்டு செல்லப்பட்டபோது மயங்கிச் சரிந்துள்ளார். அவரை மருத்துவமனையில் சேர்த்தபோது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் அறிக்கையிட்டனர்.

பருத்தித்துறை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா இறப்புத் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டார். (அ-எ-26)

### போராட்டங்களுக்கு...

இன்றும், நாளையும் கொழும்பு - கோட்டையில் ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பகுதிக்குள் எதிர்ப்பில் ஈடுபடுவோர் பிரவேசிக்கத் தடை விதிக்க வேண்டும் என்று பொலிஸாரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முன்வைத்த இந்தக் கோரிக்கையை நேற்றுப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட மேலதிக நீதிவான் அதை நிராகரித்தார்.

குற்றச்செயல் இடம்பெற்றால் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்குப் பொலிஸாருக்கு அதிகாரங்கள் உள்ளதால் இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்படுகின்றது என்று நீதிவான் அறிவித்துள்ளார். (அ-எ-22)

### அரசாங்கத்துக்கு...

பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இந்த சைக்கிள் பேரணி யாழ்ப்பாணம் நகரை அடையவுள்ளது.

நாளை நாடு முழுவதும் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் நிலையிலேயே யாழ்ப்பாணத்தில் இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், செம்முகம் ஆற்றுகைக் குழு, தேசிய கலை இலக்கியப் பேரவை, தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவை, யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனம், குரலற்றவர்களின் குரல், பன்மைத்துவ மக்களாட்சி மன்றம், புதிய ஜனநாயக மாக்ஸிஸ லெனினிஸ கட்சி, சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு என்ப இந்தப் பேரணிக்கு ஆதரவளித்துள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள வெகுஜன அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு இடையே நடைபெற்ற கலந்துரையாடலின் அடிப்படையில் இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-எ-125)

### சைக்கிள்...

யாழ்ப்பாணம் பொலிஸாரைத் தொடர்பு கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடந்த சைக்கிள் திருட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணைகளின்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)

### இ.போ.ச.

சபையின் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### போக்குவரத்து சிக்கல்:

# கர்ப்பிணி அரச பணியாளர் குறித்து கவனம் செலுத்துக

## பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் கோரிக்கை

**கொழும்பு, ஜூலை 8**

**நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடியால் அரச பணியாளர்களை அவர்கள் வசிக்கும் இடத்துக்கு அருகிலுள்ள சேவை நிலையங்களில் பணிக்கு அமர்த்தும்போது கர்ப்பிணி அரச ஊழியர்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவேண்டும் என பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.**

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத் தலைவர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஷ் குணவர்தனவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவேண்டுகோள்விடுத்துள்ளார். அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கர்ப்பிணி அரச பணியாளர்கள் எதிர்நோக்கும் போக்குவரத்து சிக்கலை தவிர்க்க அவர்கள் வசிக்கும் இடத்துக்கு அருகிலுள்ள வேறொரு சேவைநிலையத்துக்கு பணிக்கு நியமிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் இவ்வாறு நியமிப்பதில் ஏதேனும் இடையூறுகள் காணப்படின் வீட்டிலிருந்தே இணையவழியில் தமது கடமைகளைச் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் .

மேலும் இந்த விடயம் தனியார் துறையினருக்கும் பிரயோகித்தல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படவேண்டும்- என்றுள்ளது. (ச-இ)

### 22ஆவது திருத்தம் மூலமாக

# ஜனாதிபதியின் அதிகாரம் மேலும் அதிகரித்துள்ளது

## கிரியெல்ல குற்றச்சாட்டு


கொழும்பு, ஜூலை 8

22ஆவது திருத்தம் மக்களை ஏமாற்றும் கண்கட்டு வித்தை. இந்தத் திருத்தத்தின் மூலமாக ஜனாதிபதியின் அதிகாரம் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சி பிரதமகொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். கிரியெல்ல மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை குழு மிகவும் அவசியமாகும். என்றாலும் 19 ஆம் திருத்தத்தை மீண்டும் கொண்டுவராமல் துறைசார் மேற்பார்வைக் குழுக்களை அமைப்பதில் எந்த பிரயோசனமும் இல்லை. அதே போன்று அரச நிறுவனங்களை அரசியல் தலையீடுகளில் இருந்து மீட்க வேண்டும் என பிரதமர் தெரிவித்திருந்தார்.

19 ஆவது திருத்தம் மூலம் அதனையே நாங்கள் செய்தோம். ஏனெனில் நிறுவனங்கள் அனைத்தையும் ஜனாதிபதிக்கு கீழ் கொண்டுவந்திருக்கின்றது. அப்படியானால் அரச நிறுவனங்களை அரசியல் தலையீடுகளில் இருந்து எவ்வாறு பாதுகாக்க முடியும். அதனால் பிரதமர் தெரிவிப்பதுபோல் குழு அமைத்து அரச நிறுவனங் களை பாதுகாக்கமுடியாது. அத்துடன், அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச கொண்டுவந்திருக்கும் 22 ஆவது திருத்தம், 19 ஆவது திருத்தம் அல்ல. ஆரம்பத்தில் பிரதமர் 19 ஆம் திருத்தத்துக்கு சமமான திருத்தத்தையே அனைவருக்கும் காட்டியிருந்தார். ஆனால், பின்னர் அதிலும் திருத்தம் மேற்கொண்டு ஜனாதிபதியின் அதிகாரத்தைப் பலப்படுத்தியுள்ளனர் - என்றார். (ம)



திருக்கேதீச்சர ஆலய கும்பாபிஷேகம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோது ஆலயத்துக்கு வருகை தந்த பக்தர்களுக்கு மன்னார் றோட்டரிக் கழகத்தால் தண்ணீர், மோர் என்பன வழங்கப்பட்டன.இதற்கான நிதிப்பங்களிப்பை அளவெட்டியைச் சேர்ந்த கந்தையா ஐயாத்துரை நினைவாக நோர்வேயில் வசிக்கும் அவரது மகன் ஐ.தீபகாந் வழங்கினார். (ஒ-14,213)

## பொங்கல் விழா

கிளிநொச்சி, ஜூலை 8

பளை இரட்டைக் கேணி கண்ணகை அம்பாள் கோயிலின் வருடாந்த பொங்கல் விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஒ-14,9)

# எரிபொருள் வராத போதும் வாகனங்கள் நீண்ட வரிசை

சாவகச்சேரி, ஜூலை 8

எரிபொருள் நிலையத்தில் எரிபொருள் வராதபோதும் பொதுமக்கள் தமது வாகனங்களை எரிபொருள் நிலையத்தில் நீண்ட வரிசையில் நிறுத்தியுள்ளனர்.

சாவகச்சேரி லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையத் துக்கு எரிபொருள் வரவுள்ளதாகக் கிடைத்த தகவலையடுத்து நேற்றுக்காலை தொடக்கம் பெரும் எண்ணிக்கையான வாகனங்கள் எரிபொருள் நிலையத்தின் முன்னால் நிறுத்தப்பட்டன. இது தொடர்பாக எரிபொருள் நிலையத்துடன் தொடர்புகொண்ட போது எரிபொருள் இன்னமும் வரவில்லை. வந்த பின்னரே விநியோகம் இடம்பெறும் எனத் தெரிவித்தனர். (ஒ-14,9)

# ரயில் கடவை அமைக்கக்கோரி பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஜூலை 8

வவுனியாவில் பாதுகாப்பான ரயில் கடவை அமைக்குமாறு கோரி பொதுமக்களால் ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா - செட்டிகுளம் துடரிக்குளம் வீதியில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையால் பல உயிரிழப்புகள் இடம்பெற்று வருகின்றன.

இதனால் ரயில் கடவையைப் பாதுகாப்பானதாக அமைத்துத் தருமாறு கோரி செட்டிகுளம் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது "பாதுகாப்பற்ற கடவையில் உயிர்போவதை இன்றே நிறுத்துவோம்", "எம்மை ஏற்றிச்செல்லவே புகையிரதம், எம்மை ஏற்றிக்கொல்ல அல்ல", "அதிகாரிகளே நடவடிக்கை எடுங்கள்" போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஒ-14,110)


**Canada Study & Work Program**

The program is suitable for:

Farm related occupations, Hospitality, Nurses, Accountants, Engineer, IT Professionals, Educated Professionals, Pharmacists, Medical & Healthcare, Technician, Baker, Carpenter, Mechanics, Painter & Decorator, Artist and etc....

Who have done the "A/L, diplomas and degree; they can apply for these programs. (No need IELTS)"

Visa Consultant

134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna. Tel: 0770385584

naltcjaffna@gmail.com

**காணி விற்பனைக்கு**

வவுனியா தோணிக்கல் மேட்டுத்தெருவில் 4 பரப்பு அறுதி உறுதி காணி விற்பனைக்கு உண்டு விலை பேசித்தீர்மானிக்காலம். தமிழர் செறிந்து வாழும் பகுதி (CS 45495) (3/6)

Whats app & Viber 075 773 2359 00447904605603

**விநியோகஸ்தர்கள் தேவை**

நவாலி - மூளாய்
மானிப்பாய் - சுழிபுரம்
வேலணை - சரவணை
திருநெல்வேலி - புன்னாலைகட்டுவன்
ஆகிய பிரதேசங்களுக்கு

துவிச்சக்கரவண்டி மூலம் பத்திரிகைப் பிரதிகளை, கடைகளுக்கு விநியோகம் செய்வதற்கு ஆர்வமுள்ளோர் உடன் தொடர்பு கொள்ளவும்.



சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்புக்கு - 0716182182

உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.